# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருடப் பரீட்சை கலை கலாச்சாரப் பீடம் – 2012/2013

## இரண்டாம் அரையாண்டு (ஆனி / ஆடி, 2015)

### AIT 1222 - தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் திறன் அறிமுகம் II

### எழுத்து மூலப் பரீட்சை

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும் நேரம்: 1 மணித்தியாலம்

Q1)

1. கணணி வலையமைப்பு (Computer Network) என்றால் என்ன என்பதை விபரிக்குக?
2. கணணித் தகவல் பரிமாற்றல் வகையில் அடங்கும் ஒருவழி வகை (Simplex Mode), அரை இருவழி வகை (Half-Duplex Mode), முழு இருவழி வகை (Full-Duplex Mode) என்பனவற்றைப்பற்றி சுருக்கமாக விபரிக்குக.
3. இணையச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் பின்வரும் *network protocol* களின் விரிவாக்கங்களைத் தருவதோடு அவற்றின் முக்கிய பயன்பாட்டினையும் தருக.
   i) HTTPS;
   ii) FTP;
   iii) SMTP;
   iv) POP;
   v) ARP.
4. கணணி வலையமைப்புகளில் பாவிக்கப்படும் கம்பி வழியற்ற ஊடகங்கள் (Wireless Transmission Media) மற்றும் கம்பி ஊடகங்கள் (Wired Transmission Media) ஒவ்வொன்றுக்கும் நான்கு உதாரணங்கள் தருக.
5. 3G ($3^{rd}$ generation) வலையமைப்பு மற்றும் 4G ($4^{th}$ generation) வலையமைப்பு என்பவற்றிற்கிடையேயான பிரதான வேறுபாடுகள் மூன்று தருக.

Q2)

1. தரவுத்தளம் (Database) மற்றும் தரவுத்தள முகாமைத்துவத் தொகுதி (Database Management System) என்றால் என்ன என்பதை வரையறுக்க.
2. அலுவலகம் ஒன்றின் வழமையான நடைமுறைகளுடன் ஒப்பிடும்போது தரவுத்தள முகாமைத்துவத்தொகுதி ஒன்றின் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய மூன்று அனுகூலங்கள் மற்றும் இரண்டு பிரதிகூலங்கள் தருக.
3. மொபைல் வணிகம் (Mobile Commerce) என்றால் என்ன என்பதை வரையறுப்பதுடன் மொபைல் வணிகத்தின் முக்கியமான நான்கு பயன்பாடுகளையும் தருக.
4. மொபைல் மூலமான வணிகம் (Mobile Commerce) மற்றும் மின்னியல் மூலமான வணிகம் (Electronic Commerce) என்பவற்றுக்கிடையேயான வேறுபாடுகள் நான்கு தருக.
5. மின்னியல் மூலமான வணிகத்தின் தீமைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அத்தீமைகள் சமூகத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என தெளிவாக விபரிக்குக.